923

உ

முருகன் துணை.

கணவன் மனைவி கற்பு விளக்கம்.

——(o)——

இஃது

தஞ்சை ஜில்லா மாயவரம் தாலுக்கா,

பிறையாறு

ஸ்ரீமான் கு. சோமசுந்தர நாடாரவர்களால்

இயற்றப்பெற்றதை

பொன்னேரி இஜாராதார்

ஸ்ரீமான் சுப்பிரமணிய நாடாரவர்கள் பொருளுதவியால்,

———

காஞ்சீபுரம் சந்திரபானு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

———

1931

RU1
N31
176344

[விலை அ

உ

முருகன் றுணை.

கணவன் மனைவி கற்பு விளக்கம்.

இஃது.

தஞ்சைஜில்லா மாயவரம் தாலுகா,

பிறையாறு

ஸ்ரீமான். கு. சோமசுந்தர நாடாரவர்களால்

இயற்றப்பெற்றதை,

பொன்னேரி இஜாராதார்,

ஸ்ரீமான், சுப்பிரமணிய நாடாரவர்கள் பொருளுதவியால்,

காஞ்சீபுரம் சந்திரபாநு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1931.

காப்பிரைட்] [விலை அ

174244 / 8763 301.426

உ
முருகன் துணை.

சாற்றுக்கவிகள்.

இஃது
காஞ்சிபுரம்
ஸ்ரீமான், கா. நிச்சல இராமாநந்த சுவாமிகள்
இயற்றியது

திருவாணி யுறைபிறைசை நகர்வாழுஞ் சான்றோர்தந் திலகன் செம்மல், பெருபாய்மை யுழுகுமர சாமிநா டார்தவத்திற் பிறந்தே வர்க்கும், வெருவாத புலமைசெறி சோமசுந் தரப்புலவன் விமலர்க் கன்பன், பரிவாய்க்க ணவன்மனைவி. கற்புவிளக் கம்புனைந்து பாரோர்க் கீந்தான்.

இஃது
காஞ்சீபுரம். நிச்சல-இராமானந்த சுவாமிகள் அன்பருள் ஒருவர்
பரமார்த்த ரத்நாகரம் வித்வான்,

மணி. திருவேங்கட்முதலியார் இயற்றியது.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பிறைசைக் கரசாய்ப் பேசவரும்
பெருமைச் சான்றூர் குலதிலகன்
தறைசெய் தவத்தாற் சார்குமா
சாமி நாடார் தருங்கல்வித்
துறைசெய் சோம சுந்தரப்பேர்த்
தூயோன் றுணைவன் றுணைவியியல்
நிறைசெய் விளக்க நூனன்றே
நிசழ்த்தி நிலத்தி னிறுவினனே.

இஃது
தமிழ்ச்சங்கப்புலவரும், சந்திரோதயப் பத்திராசிரியரும், காரைக்
கால் செண்ட்மோஸ் காலேஜ் ஹெட்மாஸ்டரும்ாகிய
தமிழ்ப்பண்டிதர்,

ஸ்ரீமான். மாசிலாமணிதேசிகரென்னும் தாவீது பிள்ளை யவர்களால் இயற்றப்பெற்றது.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

நீரணிசெஞ் சடைவயின்வெண் ணிலவணியுங் கருமிடற்று நிம
மேய, சீரணியுந் தலப்பிறைசைக் கோரணியா யமைந்தபெருஞ்
...னை, தாரணியும் புயக்குமர சாமிநா டார்தவத்தின் றன

யன் கேள்வி, யோரணியுஞ் சோமசுந்த ரக்கலைவல் லோனளித்தா னொருநூ லம்மா. (1)

அந்நூல்யா தெனிற்கணவன் மனைவிகற்பு விளக்கமெனு மரும்பேர் வாய்ந்த, இந்நூல்தா னிதனுளுயர் பன்னூலு மேற்கோளா வெடுத்துக் காட்டி, எந்நூலு மிதற்கொவ்வாப் பொன்னூலென் றுலகுணர்ந்தே யினிதி னுய்யப், பன்னூலும் வாய்மடுத்த சோமசுந்த ரக்கலைஞன் பகர்ந்திட் டானால். (2)

கத்தியநன் னடைபயிற்றி யகத்தியமாம் பலமேற்கோள் காட்டி யான்ற, சத்தியமெய்ப் பொருள்செறித்திங் குலகியல்க ளனைத்தினையுஞ் சாரச் சேர்த்து, நித்தியமு மனித்தியமு மிற்றென்னா வுலகுணர்ந்து நெறியே செல்வான், பத்தியிற்செய் தான்கணவன் மனைவிகற்பு விளக்கமெனும் பான்மை நூலே. (3)

உம்பர்களும் வியப்பெய்த வைத்தியமந் திரஜோஸ்ய வுயர்ந்த யோகச், சம்பிரதா யந்தெரிந்த சற்கருமப் பெரியோனுந் தருமக் கொண்டல், கும்பலிங்க நாடார்தம் பௌத்திரனுஞ் சோமசுந்த்ரக் குரிசி லுக்கும், இம்பரினிந் நூலியற்ற லரிதேயோ தமிழ்வல்லீ ரியம்பு வீரால். (4)

பாட்டினுக்குப் பரிசளிக்கு மேட்டிமைசால் வள்ளன்மீர் பகரக் கேண்மின், நாட்டினுக்குட் சிறந்தபிறை யாற்றினுக்குட் சோம சுந்த்ர நாடார் மேற்கோள், காட்டினுக்குத் தரும்பொருள்கள் கூட்டியியற் றியநூலைக் கண்டிங் கொவ்வோ, ரேட்டினுக்கு மாயிரம் பொன் கொடுத்தாலும் போதுமென வியம்பொ ணாதே. (5)

சிட்டருக்குப் பரிந்துதவு குமாரசா மிக்குரிசிற் செல்வ னாகித், துட்டருக்குப் பகையான சோமசுந் தரவியவுள் தொகுத்த நூலோ முட்டருக்கு மறிவுறுத்தும் முனிவரையு நெறிதிருத்தும் முனிந்த பாவக், கட்டறுத்து வீடுதரு மெனிலினியா மிதன்பெருமை கழற லென்னே. (6)

நற்றடங்கொள் தடப்பிறைசைக் குமரசா மித்தோன்றல் நலத்த வத்தால், உற்றடங்கா மகிழ்விளைத்த சோமசுந் தரநிபுண னுளுற்று நூலாற், பெற்றகடன் பெற்றார்க்கு மினிதளித்தான் குருவினுக்கும் பெருமை சாரக், கற்றகட னதுங்கொடுத்தான் காசினியி லிவனன் றோ மனிதன் கண்டீர். (7)

சட்டவரும் பெருநெறியிற் றிறம்பாத பிறசையினுட் டஞ்ச மென்னு, நட்டவர்தந் துனியொழிக்குங் குமரசா மிக்கனவான் நயந்து மண்மேல், பெற்றவரும் பெறன்மணியாஞ் சோமசுந் தர மியற்றும் பெருமை நூலைத், தொட்டவரு நலம்பெறுவா ரெனிற் படிப்போர் பெறுநலங்கள் சொல்வ தென்னே. (8)

எழுத்துவரி யாலமைவ தெந்நூலுங் கடலுடுத்த விருநிலத் திற், செழுத்துவரி நெல்விளையும் வளப்பிறைசைச் செழுநகரிற் சிறக்க வாழும், பழுத்தவறி வுளசோம சுந்தரனூல் வரிகளினைப் பார்த்து முத்தம், அழுத்துவரி யானமைந்த தென்பேன்யா னொரு வருக்கு மஞ்சுவேனே. (9)

ஆரவரென் றுலகி லாரையுங்கண் வலைவீசி யதனு ளாக்கு
வாரவர்நன் றிதையா விவ்வுவமை யெங்களின்பல் வரிசைக் கன்றோ
கூறுவரின் றிதனைநீர் கூறுகின்றீ ரிந்நூற்குக் கூடா தென்று
சீறுவராற் சோமசுந் தரமேநீ விலக்கித்துணை செய்து வாழ்க. (10)

இஃது

மதுரைத்தமிழ்ச் சங்க வித்துவான் பறங்கிப்பேட்டை,
ஸ்ரீமான் அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்
இயற்றியது.

ஆசிரியப்பா.

ஒலிகடல் வரைப்பி னுயரற மிரண்டனுட்
கலிகெழூஉ மில்லறங் கற்பொடு தழீஇ
மேம்பட னுறீஇ விளக்கு மிம்மையு
மோம்புதன் மிக்க வுவமையி லம்மையு
மங்கல முணர்ந்து செங்கலஞ் சிறப்ப
மிக்கதோர் நூலினைத் தக்கதா நிலைபெறச்
சாற்றினன் யாரெனிற் போற்றுறக் கேண்மின்!
நித்திலம் பரந்த கத்துதெண் ணீர்க்கரை
புன்னை யரும்பொடு புதுமணங் கமழப்
பவளக் கோட்டின் பாங்கர்வெண் குருகு

கயறேர்ந் துழலக் காரிகை மடவார்
படிந்து கனைவரொ ரருமலப் பறியக்
கடிந்து காமமும் வீடுங் கிடைத்துச்
செந்நெலும் வெண்ணெலுஞ் செறிந்து வெள்ளுப்போ
டிந்நலம் பெருக்கு மந்நிலம் பிறைசை
மாநக ருதித்த மன்னர்தங் குலத்தோன்!
கும்ப முனிநிகர் கும்பமாற் பேரன்
முத்தமிழ் முறையின் முற்றிநற் பேறு
வித்தகச் செம்மல் வியன்பத மென்னப்
பத்திமை பூண்ட வுத்தமன் குமர
சாமிமால் பயந்த சற்குண நிபுணன்
எழுத்துஞ் சொல்லும் பொருளு மியாப்பு
மணியுந் தெரிந்திங் கமர்தரு கவிஞன்
ஐம்பெரு நூலு மமைதரக் கற்றோன்
ஒழுக்கமும் பொறையும் விழுப்பமுங் கண்டோன்
கண்டோர்க் கினியன் காண்டரு சீர்த்தி
நாம நவின்றிடி ஞளுஞ்
சோம சுந்தரன் சுகம்பெறு மவனே.

இஃது

பிறையாறு, ஸ்ரீ வெள்ளைமரைக்காயர் புத்திரரும், இந்நூலாசிரியர் மித்திரரும், மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் பறங்கிப்பேட்டை,

ஸ்ரீ அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை

அவர்கள் மாணாக்கருமாகிய

ஸ்ரீமான் அப்துல் அஜீஜ் மரைக்காயர் பாடிய

ஆசிரியவிருத்தம்.

கடலுலகி லுபயநம் பாலரிவ ரனைவருங்
கண்யம்ப டைத்தின் பமாய்க்

கவினுகல் லறமுடைய வில்லற மென்னுமோர்
　　கயிறிழையிற் கட்டுண் டுயர்
கற்பிபலிற் சொற்பிச கற்பமு மிலாவிதங்
　　காத்துறவி னொடுஞான் றூநற்
கதிபுபிது துதியுநன் மதியும்பொன் னிதியுமுட்
　　களிப்புஞ் செழிப்ப தத்த
முடலிரண் டெனினுமுயி ரொன்றாய்க் கலந்திருந்
　　தத்தமர்க ளாயும் சம்பத்
தோங்கச் சிரஞ்சீவி யாய்நிலவி யும்புத்ர
　　வுற்பத்தி யொடுவாழ் கவே
உவந்தரிய நூல்சம்ப்ர தாயமதை யாங்காங்
　　குதாரணங் காட்டி யுஞ்சீ
ருலவநம ரோர்சபா சென்றிறும் பூதக்கற்
　　பொளிர்முதிர் விளக்க மென்னத்
திடமிக்க நூலொன் றியற்றினவ னாரெனிற்
　　றெண்ணீர் வளத்த பொன்னித்
திகழ்வளவ நாட்டினுக் கொருசிர மெனப்பெருஞ்
　　செல்வநிமிர் பிறையாற் றினிற்
சீர்த்திபெறு க்ஷத்திரிய குலகுமர சாமிமால்
　　செய்தவப் புத்ர ரத்னம்
திரிதமி ழிலக்கண முழுதுமெளி திற்பழுது
　　தீரத் தெளிந்த நிபுணன்
தடமகுட முடிமன்ன ரவைமெச்சு வோன்பொதுத்
　　தன்மைக் குழைக்கு முசிதன்
சன்மார்க்க மதனைத்தன் னன்மார்க்க மென்னுமு
　　தாரதத் துவம கத்வன்
சகலகலை கும்பனென் னன்பன்கவி கம்பனுரை
　　தனினச்சி னார்க்கி னியனும்
சந்ததமு மொளிர்சோம சுந்தர னென்றெவருஞ்
　　சாற்றுமபி தான னனரோ.

இஃது
பிறையாறு
ஸ்ரீமான் ச. குழந்தைசாமி நாயகரவர்கள்
இயற்றியது

ஒன்றுரை கடந்துமுனை யொன்றிலேறி
யுள்ளறிந்து புறமறிந்திங் குயருஞ் ஞானக்
கன்றான குழவிகட்கு மதிபு கட்டுங்
கலைவல்லோன் பதினெண்மர் கருத்தி னோர்ந்து
நன்றான வஷ்டாங்க யோகத் தெய்தி
நாடுமலங் களைக்களைந்து சமாதி யுற்றோன்
குன்றான பெருந்தவமே ரொளியைப் போல்வான்
கும்பலிங்க நாடனெனும் குணமார் தங்கம் (1)

அன்னவன்செய் மாதவமே யோருருவாய் வடிவெடுத்தே யவனி வந்து, பன்னரிய பலகலையு மிலக்கணமு மிலக்கியமும் பகர்நல் லாசான், துன்னியமெய் யறிவுபொறை நிறைகுமார சாமியெனுந் தோன்ற லீன்ற, கன்னியவான் மறைதெரிவான் நெறியுடையோன் கருத்தறிவான் கவிபெய் மேகம். (2)

கற்பென்னும் துகி லுடுத்தி யறிவென்னும் பணிபூண்டு காத லன்றன், விற்பன்ன நெறிகுறியின் படியொழுகி யில்லறத்தில் விளங்கு மாதர், உற்பன்ன முறையிதெனக் காவியமேற் கோள்பலவு முவப்பிற் சொற்றான், பொற்பென்ன வொளிர்பிறைசைச் சோம சுந் தரமென்னும் புனித வானே. (3)

முகவுரை.

அறிவின்மிக்க அன்பர்காள்!

'கணவன் மனைவி கற்பு விளக்கம்' என்னும் அரும்பெயர் பூண்ட இக்கற்பிலக்கணமானது என்னால் மிக்க பிரயாசையோடு நம் சகோதர சகோதரிகளின் நன்மையைக்கருதி எல்லோர்க்கும் எளிதில் புலப்படுமாறு எளிய நடையில் ஆங்காங்கும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டி எழுதலானேன். இதில், சொற்குற்றம், பொருட்குற்றம் முதலிய எக்குற்றங்களிருப்பினும், அக்குற்றங்களைக்கொள்ளாமல் குணத்தைமட்டும் அங்கிகரித்து அடியேனை ஆசீர்வதிப்பீர்களென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
தங்களன்புள்ள
கு. சோமசுந்தர நாடார்.

சிறப்புரை.

சாக்ஷாத் சர்வேஸ்வரனுற் படைக்கப்பெற்ற இப்பூவுலகின்கண் மனுமக்கள் தொன்றுதொட்டு விவாகமுறை யேற்படுத்தி, ஆண் பெண் கலந்து, சந்தானவிர்த்தியாய்த் தழைத்துவருகின்றனர். ஆண் பெண் பருவ காலங்களிற்றெய்வீக வூழ்வினையால் இணைக்கப்பெற்று இல்லறம் நடத்தி வருகின்றனர். மனுமக்கள் இல்லற வியல்பை முக்கியமாய்க் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கின்றனர். இவ்வியல்பை பழமையான தெய்வீகக் கவிஞர்களும், மற்ற வித்துவான்களும் மிக்க அருமையுடன் தெளிவாக தத்தம் நூல்களிற் புகன்றிருக்கின்றூர்கள். ஆயினும் கல்விமான்கள் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டுப் பேசவேண்டியவர்களாகவே யிருக்கின்றனர்.

இம்முறையில் இந்நூலாசிரியர் 'கணவன் மனைவி கற்பு விளக்கம்' என்னும் இந்நூலை எழுத முன்வந்துளார். இவர் கணவன் மனைவிகட்குரிய, கற்பு, வாய்மை, மாதர்கள் கணவர்களுக்குள்ளடங்கி நடக்க வேண்டிய முறை, ஆடவர்கள் மாதர்களை ஆதரிக்கவேண்டிய விதம் ஆகியவற்றை தம்சொந்த அபிப்பிராயங்களைக் காட்டிச் சொல்லிவந்ததுடன், பெரும்பாலும் காசிகாண்டம் முதலிய பழநூல் கவிகளை உதாரணங்காட்டிக் கூறிவந்திருப்பதைப் பாராட்டற் பாலது. மேலும், இந்நூல் சகலஜனங்கட்கும் இன்றியமையாத நன்மையைத் தாக்கூடியதென்பது சொல்லாமலே விளங்கும். நூலாசிரியர், சோழவள நாட்டில், தாங்கம்பாடி யென்னும் கடற்றுறைப் பட்டணத்தையடுத்த, பிறையாறு என்னும் சிறந்த நகரத்தில் உதித்தவராவர். நாடார் குலத்தவர் சிறிதுகாலத்திற்கு முன்பு இந்நகரத்தில் மாக்ஷியுடன் இருந்து தமிழ் நாட்டிற்கே பிரபல வித்துவசிரோமணியாய் விளங்கிய ஸ்ரீமான், சொக்கலிங்க நாடார் அவர்தம்பி மார்த்தாண்ட நாடார்இவர்கள் இந்நூலாசிரியரின் சிறியதந்தையாராவர்.பலதமிழ்ப் பத்திரிகைகட்குப் பலவியாசங்கள் எழுதியும், நல்ல, நல்ல அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தவரும் இவரே. இவர் எழுதிய இந்நூல் சுருக்கமாயிருப்பினும் வசனநடை தெளிவானதாயும், யாவருக்கும் எளிதில் குறித்தபொருளை விளக்கிக் காட்டுவதாகவு மிருக்கின்றது. சோமசுந்தர நாடாரென்ற நாமங்கொண்ட இந்நூலாசிரியர் இது போன்ற நூல்களெழுதி வெளியிடல் நலம்.

இப்படிக்கு,
ஆ. குமரய்ய நாடார், பெருநாழி.

உ

முருகன் துணை.

கணவன் மனைவி கற்பு விளக்கம்.

கணபதி காப்பு.

சீர்பெறுங் கணவன் மனைவியோ டமர்ந்து
  திருவள ரில்லற நடாத்தும்
பேர்பெறு நீதி நூற்றரா தலத்தும்
  பிரபல மாகவே கயிலை
ஏர்பெறும் பரம னுமை யொடு மீன்ற
  வெழில்விநா யகனொடு மகுரர்
கார்பெறுங் குழுவைத் தொலைத்தசெவ் வேளின்
  கழலிணை யனுதினம் பணிவாம்.

நூல்.

கணவன் மனைவி இருவரும் மனவொற்றுமையுடன் இல்வாழ்க்கைக்குரியவர்களாய், குரவர், தாய், தந்தை, மனைவி, புதல்வர், விருந்தினர், கடவுளர், அதிதிகள் இவர்களைக் கருணையோடு ஆதரித்து அன்புபாராட்டி, அருள், பொறை, நீதி, ஒழுக்கம், சத்தியம் ஆகிய இவற்றைத் தவறுமல் நடப்பவர்கட்கு ஆதிபகவான் சொர்க்காதிபோகங்களுங் கொடுத்து முடிவில் முத்தியையும் கொடுப்பனென்பது ஆன்ருேர்கள் வாக்கியம்.

உதாரணம்.

"குரவனைத் தாயைத் தந்தையை மனையைக்
  குற்றமில் புதல்வனை விருந்தை
இரவுநண் பகலும் வழிபடு வோனை
  யதிதியை யெரியினை யீங்குக்
கருதுமொன் பதின்மர் தம்மையு நாளுங்
  கருணைகூர்ந் தினிதளித் திடாது
மருவுமில் வாழ்க்கை பூண்டுளோன் றன்னை
  மக்களுட் பதடியென் றுரைப்பார்."

சிலர் விவாகவாரம்ப காலமுதல் மரணகாலம் வரையும் கணவனும் மனைவியும் ஒற்றுமையின்றி ஒருவருக்கொருவர் பிணக்குற்றுச் சதாசண்டை சச்சரவாக வாணாளெல்லாம் வீணாளாக்கி அவரவர் செய்யவேண்டிய இல்லற தருமங்களை கூடியவரை செல்வமுள்ளவர்களும், இல்லாதவர்களும் சரிவர நடத்தாமல் வீணே மதிகேடு கொண்டு மனக்கிலேசமுற்று ஏறுமாறாக வாழ்தல் ஒரு மனையில் பாம்பும் மனிதனும் வாசஞ் செய்தலை யொக்கும்.

உதாரணம்.

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை, குடங்கருட்
பாம்போ டுடனிருந் தற்று"

இவர்களிருவருள் யார்மேற் றவறுகளிருந்தபோதினும், மனைவி கணவனுக்குக் கீழ்ப்படிந்து அவன் சொல்லும் ஏவற்படி கொஞ்சமேனுந் தவறுதலின்றி நடந்து வரவேண்டியதுதான் அவசியமென்று பலஸ்மிருதி, புராணம், இதிகாசங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. ஒரு விஷயத்தைப்பற்றி கணவன் நன்றென்று கூறினால், மனைவியும் நன்றென்றே கூறல்வேண்டும். அன்றியும், கணவன் தீதென்று கூறினால் மனைவியுந் தீதென்றே புகலவேண்டும். நன்றல்லாத காரியத்தைக் கணவன் சொல்ல அதன்படி மனைவியும் நன்றென்று நடந்து அதனால் ஏற்படும் பாவபுண்ணியங்களை யிருவருள் யாரடைந்தபோதினும், மனைவி கணவன் சொற்படியே நடக்கவேண்டும் என்பதுதான் கற்புக்குரிய மனைவியற் கழகாகும்.

உதாரணம்.

"ஒன்று கேள்வ ருளத்தின் மகிழ்ந்தொன்றை
நன்றி தென்றிடிற் றாமுநன் றென்பரால்
அன்று தீமையென் றாலது தீமையே
என்று கூறுவ ரேத்தருங் கற்பினார்."

கணவனுடைய வுள்ளன்பிற் குரியவளாய் அவன் ஏவற்பணிவிடைகளைச் சமயமறிந்து செய்பவளாய், சுசீகரமுடையவளாய் ஒழுகும் தோகையனைய மங்கைவாழுமிடத்தைக் கற்பகவன மடர்ந்த பொன்னாடென்றே யாவுந் தெரிந்த அறிஞர் கூறுவர்.

உதாரணம்.

"அற்புறு மனமுட னமையந் தேர்ந்துதன்
விற்பன னாயகன் விரும்பிக் கூறிய
சொற்படி நடந்திடுந் தோகை வாழிடங்
கற்பக நாடெனக் கருத லாகுமால்." 4

தாய் தந்தையர் சொற்படி நடக்கும் விவாக மாகாத கன்னியர்கள், செவ்வேளை நிகர்த்தவரேனும், மன்மதனையொத்தவரேனும்; அன்னவருருவத்தைப் பார்த்தபோதே யருவருக்கவேண்டும். தாய் தந்தையர் ஊழ்வினைச் செயலால் தம்மிலொத்துக் குரூபியாகியும், நோயினனாகியும், முடவனாகியுமுள்ளா னொருவனுக்கு விவாகம் புரிந்து விடுவரேயாயின் அப்புருடனைக் கடவுளாக மதித்து இன்புற்று நடந்துவரவேண்டுமென்பதுதான் வேதத்தின் வாய்மை. அங்ஙனமிருக்க சிலபெண்கள் தாய் தந்தையர்களால் குறிப்பிட்டு தீர்மானித்த வரனை மறுத்து தாமே ஓர் வரனை நிச்சயித்து மதாசாரத்திற்கும், சாதி ஆசாரத்திற்கும் மாறுதலாய் மணஞ் செய்துகொள்வதானது எத்தகைய மடமை!

உதாரணம்.

"குரவர்தா மியைந்து கொடுத்தில ராகிற்
குமரவே ளனையவ ரேனு
மருவார நிற்பர் தந்தைதாய் தங்க
ளாணையி னொழுகுகன் னியர்தா
முருவிலா ரெனினுங் குரவருண் மகிழ்வுற்
றுதவுறி னனையவர் தம்மைப்
பாவுவான் கடவு ளாகவே நினைந்து
பண்புடன் பயிலுவ ரன்றே." 5

பெண்களுக்கு விரதம், தவம், தன்மம், தீர்த்தம், ஸ்தலம், மூர்த்தி, தரிசனம் முதலியவைகள் வேண்டியதில்லையென்னும், புருஷனால் மகிழப்பட்ட மடந்தையர்களைத் தேவாதி தேவர்களும் இன்புற்று அவர்களை சுவர்க்கத்திற் சேர்ப்பார்களென்றும் நூல்கள் கூறும்.

உதாரணம்.

"வேறெடுத் தோதத் தக்க விரதமாந் தவந்தா னேது?
கூறிடுந் தரும மேது? குறிக்கொளுஞ் சமாதி யேதிங்
கீறிலாத் தீர்த்தந் தானே யாகமே திவைமற் றெல்லா
நாறுபூங் குழலார் தங்கள் பதியென நயப்பார் மன்னே." 6

கணவனால் மகிழப்பட்ட மடந்தையர்கள், தேவருலகத்திற்சென்று அங்குள்ள போகங்களையடைந்து முடிவில் முத்தியையும் பெறுவார்கள். அக்கணவனால் இகழப்பட்ட மடந்தையர் இவ்வுலகத்திற் பல்லோராலும் இகழப்பட்டு முடிவில் நரகத்தையடைந்து வருந்துவார்கள் என்பதும், பின்னரும் புவியிற் பிறந்து துன்புற்று மீட்டு நரகத்தையடைவார்களென்பதும் வேதாகமத்தின் கொள்கை.

உதாரணம்.

"மணமகள் மகிழப் பெற்ற மடந்தைமார் தேவ ரின்பங்
கணமலி யுலகிற் றுய்த்துக் கடையினின் முத்தி சேர்வார்
துணைவனால் வெகுளப் பெற்ற தொடிக்கையர் நரகிற்றுன்பம்
புணரிசூழ் புவியிற் றுய்த்துப் பின்னரும் நரகிற் போவார்." 7

கணவனே தெய்வமென்று நினைத்துப் புருடனோடு மகிழ்ந்திருக்கும் மடந்தை வாயால், மழைபெய்யென்றால் பெய்யும் விதியை வாவென்றாலும், போவென்றாலும் அந்தப்படியே நடக்கும் சிலபெண்கள் கணவனனுவாதமின்றி யளவற்ற விரதங்களை நோற்பதும், அன்னியநாட்டிலுள்ள ஆலயங்களுக்கும், விழா முதலிய தரிசனங்கட்கும், சத்துமா முதலியவைகளை மூட்டை கட்டிக்கொண்டு தனித்துப்போய் வந்து, அந்த ஆலயத்திலுள்ள சுவாமிக்கு சகஸ்திர நாம அர்ச்சனை புரிந்தேன். இந்த ஆலயத்திலுள்ள சுவாமிக்கு எள்ளன்னம் வைத்து நிவேத்தியம் செய்தேன் என்று பித்துப் பிடித்தவர்களைப்போல் பிதற்றித் திரிவதானது அவர்களின் மனக்கருவமாகிய சர்வ மூடத்தனமென்றுதான் சொல்லவேண்டும்.

உதாரணம்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை". 8

கணவன் பித்தனாயிருப்பினும், பேதமை குணத்தையுடையவனாயிருப்பினும், உன்மத்தனாயிருப்பினும், அழகில்லாதவனாயிருப்பினும், உத்தமகுணத்தைப்பெற்ற மகாலக்ஷிமியை யொத்த பெண்மணிகள் கணவனிடத்து மிகுந்த பக்தியோடு மவர் ஏவும் பணிவிடைகளைச் செய்து வாழ்வார்கள்.

உதாரணம்.

"பித்த னாயினும் பேதைய னாயினும்
மத்த னாயினும் மாண்பில னாயினும்
உத்த மத்திரு வொப்பவர் கேள்வர்தம்
பத்தி யோடவ ரேவற் படிநிற்பார்." 9

கணவன் வியாதியுடையவனாயிருப்பினும், பெருமையை நீக்கத் தக்க கள்ளுண்பவனாயிருப்பினும், அழகில்லாதவனாயிருப்பினும், கணவனுடைய பணிவிடையில் வழுவாது செய்து நிற்பார்கள் கற்பிற்சிறந்த மங்கைமார்.

உதாரணம்.

"பிணிய னாயினும் பெற்றியை நீக்குறுந்
தணியல் மாந்து தகைமைய னாயினும்
அணியி லாதவ னாயினு மன்பர்தம்
பணிவி டைத்தலை நிற்பர்கற் பாவைமார்." 10

கணவன் அழகென்பதொன்றுமின்றி மூத்த கிழவனாக விருப்பினும், பழையவினையின்வண்ணம் குட்டநோய் கொண்டு கஷ்டமுற்றவனாயிருப்பினும், அப்புருடனை மனைவியானவள் மிக்க தேசு பொருந்திய வானவர்மெச்சுந் தலைவன் நமது புருஷனென்று சதா தம்முள் உவகை கொண்டவளாய்ப் பணிவிடை புரிவாள்.

உதாரணம்.

"அழகு மின்றி யறமிகு மூப்புறு
கிழவ னாயினுங் கிட்டிய குட்டநோய்ப்
பழவி னைப்படி யெய்தினும் பாவைமார்
மழவ னென்ன மகிழ்கரைப் பேணுவார்" 11

கணவன் திடீரென்று யாதொரு காரணமு மின்றி அடாதவார்த்தை களைப் பேசினுலும், கால், கைகள் ஊனமடைய உதைத்தும், கையினு லடித்தாலும், அதைப்பொறுத்துக் கொண்டு மனைவி யாதொரு கடி னவார்த்தையும் பேசாமல் மவுனமுற்றே யிருப்பாள்.

உதாரணம்.

"ஆன கேள்வ னடாதது ரைப்பினும்
தானெ முந்துடல் தாக்கப்பு டைப்பினும்
ஊன மேபடத் தாள்கொடு தைப்பினும்
மோன மாகுவர் முல்லை மடந்தைமார்" 12

கணவன் போஜனமருந்தி கண்ணுறக்கங் கொள்ளாததற்கு முன் கற்புடைய மனைவியானவள் தான் கண் துயில் கொள்ளாள். கணவன் நித்திரைவிட்டெழுந்த பின்பும் மனைவியானவள் நித்திரைசெய்யக் கூடாதென்றும், மற்றொருவர் சயனத்தில் சேரமாட்டாளென்றும் கற்பிலக்கண நூல்கள் பலவற்றினும் கூறப்பட்டிருக்கின்றன.

உதாரணம்.

"காந்த னுக்குமுன் கண்டுயில் கொண்டிடார்
ஏந்த லுக்குப்பி னின்றுயி லேற்றெழார்
சார்ந்து வேறோர் சயனத்திற் றங்கிடார்
பூந்தண்வார் குழற் பூவைய ரென்பரே" 13

கணவன் நித்திரைசெய்தால் மனைவியும் நித்திரை செய்யவேண்டு மென்றும், ஆங்கவர் துன்பத்தை யெய்தினுல் தாமும் துன்பத்தை யடையவேண்டுமென்றும், அவர் இன்பத்தை யடையும்போது தாமு மின்பத்தை யடையவேண்டுமென்றும், இவ்விதம் நடந்த மங்கை யர்களுக்கு இதுவே பெரிய தவமென்று சுருதியின் சம்மதம். இது நிற்க, சில பெரியதனப் பெண்மணிகள் கணவன் தகுந்த ஊதியத் தோடிருக்கும்போது அவனோடின்புற்றிருந்து சுகித்து வாழ்வதும், அவன் வறுமையென்னும் அல்லலிலகப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அவனிடம் அக்கிரமமாகச் சண்டைசெய்து மனஸ்தாபப்பட் டுக்கொண்டும், நாயகனீட்டிய பொருளையுஞ் சுருட்டிக் கொண்டு, அவனை நிற்கதியாக்கிவிட்டு தம் தாய், தந்தையர் வீட்டிற்குக் கம்பி நீட்டிவிடுகிறார்கள், அங்குப்போய் நாத்திமார் முதலிய பந்துவர்க்கத்

தாரிடத்தும் சதா சண்டையிட்டுக்கொண்டு வாசஸ்தானத்தையும் விட்டு ஊரூராய் ஓரிபோலத் திரிந்து தங்கள் மேம்பாடுகெட்டு இழிவை அடைகின்றார்கள். அப்பால் கணவனும் மனம் வெறுத்து இவர்களிருவரும் ஒன்றுசேராது வெறுப்புற்று, எவர் சொல்லும் சமாதானத்தையும் கேளாது இவர்களது வாணுளெல்லாம் வீணாக்கிச் சந்ததியுண்டாகவேண்டிய பருவத்தையும் வீணேபோக்கி வயோதிக வயதில், தாம் முன்னம் செய்த காரியப் பாடனைத்தும் தவறுதலென்று உள்ளம் நொந்துருகி அப்பால் ஞானம் பெற்று, இருவருள் சமாதானத்திற்குள்ளாகி சந்ததியற்று வாழ்ந்து வருகிறார்கள். இவ்விதம் வாழும் வாழ்வானது இம்மைக்கும், மறுமைக்கும் பலனுதவி புரியாத தகாதவாழ்வென்றே கூறவேண்டும்.

176344

உதாரணம்.

"அன்பர் அஞ்சிடிற் றஞ்சுத லங்கவர்
துன்ப மெய்திடிற் றுழுமத் துன்புறல்
இன்ப முற்றிடி னின்புற் றிருத்தலே
மன்பெ ருந்தவங் கற்புடை மாதர்க்கே."

14

உலகத்திலில்லறம் நடத்துமொருவன் சகலவித பாக்கியத்தை யடைந்திருந்தாலும் விளக்கமுற்ற புத்திர பாக்கியத்தை யினிதாகப்பெறாதவன் இவ்வுலகத்தில் நின்றும் புத்தென்னும் நரகத்தை விட்டுக் கரையேறாதவனாவன். ஆனதால் பல தவம், தானம், தர்மம் புரிந்து அப்புத்திர பாக்கியத்தைப் பெறல்வேண்டும். ஆனதால், பரவுகின்ற கற்புடைய நங்கையை விவாகம்புரிதல் சந்ததியை யுண்டுபண்ணுவதற்கே யல்லது காமத்தின் பொருட்டன்றென்று வேதாகம புராணங்கள் கூறும். இவ்வழக்கை விடுத்த சிலபெண்கள் செல்வவான் வீட்டிற் பிறந்தோமென்றும், செல்வமில்லாத ஏழையானவனுக்குக் கழுத்தைக் கொடுத்தோமென்றும், கணவனை மதிக்காமலும், கணவன் தாய், தந்தை, சுற்றத்தார் முதலியவர்களை மதிக்காது மமதை கொண்டு தன்னுடைய நலன் முழுதையு மிழந்து வீணாகின்றார்கள்.

உதாரணம்.

"உலகினில் வாழ்வு பூண்டுளோன் சகல
செல்வமு முற்றிருந் தாலும்
இலகிய மகவை யினிதினீன் றிடாதா
னிம்மையிற் பயன்பெறா னதனால்
பலதவஞ் செய்து மகப்பெறல் வேண்டும்
பரவுகன் னியர்தமை வேட்டல்
நிலவுசந் ததியின் பொருட்டலாற் காமப்
பொருட்டல வெனமறை நிகழ்த்தும்" 15

மணம்புரிந்த கணவனானவன் வேற்றொரு மடந்தையைக் கூடிக்களிப்பானேயாயின், அவனை கற்புடைய மனைவியானவள் கோபித்து அவனோடு மாறுபாடாகிய சண்டையிடமாட்டாள். அவளோடும் அதிக பிரியம் பாராட்டி சிநேகித்திருப்பாள். அல்லாமலும் தான் அணிந்திருக்கும் ஆபரணங்களை கணவனானவன் தான் கலந்திருக்கும் மாற்றவளுக்கு கொடுத்தாலும், அதற்காக கற்புடைய மனைவியானவள் யாதொரு வார்த்தையும் பேசாமலும், கோபியாமலும் இருப்பாள்.

உதாரணம்.

"தோய்ந்த கேள்வனோர் தோகையைச் சேர்ந்திடில்
காய்ந்து மற்றவ ளோடிகல் காட்டிடா
தேய்ந்து நட்புற் றிணங்கி யிருப்பரால்
வேய்ந்த பூங்குழல் மெல்லிய லார்களே" 16

தான் ஒருமனைக்குப் போகவேண்டியதிருந்தால், வயதில் மூத்தவர்களைத் துணையாகக் கொண்டல்லது தனித்துப்போகாள். அன்னவளே பரிசுத்தம் பொருந்திய நெஞ்சத்தைப்பெற்ற புண்ணிய வுருவத்தை யுடைய மாதாவாள்.

உதாரணம்.

"வனையுந் தங்கலன் மாற்றவட் கீயினு
முனிவு செய்கலர் மூப்பினர் சேர்வுறாத்
தனியிற் சேர்கலர் தாம்பிற ரிற்புகார்
புனித நெஞ்சுடைப் புண்ணிய மாதரே" 17

கணவனாற் புகழப்பட்ட கற்புடைய மனைவியானவள் தன் நாயகனுடைய ஆயுளானது தேய்ந்துவிடுமென்று நினைத்து நாயகனுடைய நாமத்தை மறந்துங் கூறவே மாட்டாள். தனது நாயகன் இருந்தபோது தானும் மகிழ்ந்து இனிதாக இருப்பாள். அன்னவன் உண்டு கழித்த எச்சில் சாதங்கறி வகைகளை பாற்கடலிற் பிறந்த அமிழ்தத்தைப் பார்க்கினும் மிக்க மனமகிழ் கொண்டு உண்டு களிப்பாள்.

உதாரணம்.

"திருந்து மாயுள் சிதையுமென் றெண்ணித்தம்
பொருந்து காதலர் நாமம் புகன்றிடா
ரிருந்த போதன்றித் தாமு ளிருந்திடா
ரருந்து மிச்சி லமிழ்தி னுகர்வரால்" ௧௮

தம்மை மணம்புரிந்த அன்புக்குரிய புருஷர்கள் தமது உள்ளத்தில் எதை விரும்புகிறார்களோ அதையவர்கள் ஏவுதலுக்கு முன்னமே நாயகர் குறிப்பினால் உணர்ந்து அவ்வேலையை இயற்றுவார்கள். அல்லாமலும், நாயகரை அவதூறு சொல்லும்படியான மங்கையர்களுடையமுகத்தையும் பார்க்கமாட்டார்கள் கற்பிற்சிறந்த மங்கைமார்.

உதாரணம்.

"மேவு காதல ருள்ளம் விழைந்தன
வேவு முன்னர் குறிப்பி னியற்றுவர்
தாவி லன்பர் தமையலர் தூற்றிடும்
பூவை யன்னவர் புன்முக நோக்கிலார்" ௧௯

தம்மை விவாகம் புரிந்த மங்கையர் தமது இல்லறமானது தழைத்தோங்கும் பொருட்டு இயைவனவாகிய பொருள்களை நல்நிலையில் சம்பாதித்துச் சேர்ப்பார்கள். அல்லாமலும் அடாதகாரியங்களைச் செய்து வீணே பொருள்களை யழித்துவிடமாட்டார்கள். தம்முடைய கணவருக்கு ஆயுள்வளரும் பொருட்டு அழகிய பசுமைவாய்ந்த மஞ்சளை முகத்தினிடத்துப் பூசிக்கொள்வார்கள். இவ்வித மங்களகரமாகியும், தொன்று தொட்டு வழங்கிவரும் மஞ்சளை இக்காலத்திலுள்ள பல நவீன நாகரிகமுள்ள மங்கையர்கள் மஞ்சளை மதியாது

முன்னோர் முறைமைகளைத் தவிர்த்து தற்காலத்தில் சுண்ணாம்புகலந்த சவுக்காரமென்னும் சோப் (Soap) கட்டிகளைப் பூசிக்கொண்டு முகத்தை துலக்கிக்காட்டுகிறார்கள். அந்தோ! இஃதென்னபாவம்! கற்புள்ள மங்கையர்கள் மஞ்சளணிவதே மாமறையின் போதனை.

உதாரணம்.

"இல்ல றத்திற் கியைவன வீட்டுவா
ரல்ல செய்தே வறிதி னழித்திடார்
புல்லு காதல ராயுட் பொலிவுற
மல்ல லோங்கணி மஞ்ச ளணிவரால்" 20

ஓர் நாயகனை மணம்புரிந்து கலந்திருக்கும் பெண்ணானவள் மற்றொரு நாயகனுடைய அழகைக்கண்டும் அவன் நடையை, உடையை, பாவனையைக்கொண்டும், உவப்பை யடைந்த மாதானவள் இப்பூவுலகத்தில் பேதமைகொண்டு உழன்று திரிந்து திகைப்புற்றிருக்கும். பேயினது உருவத்தை அடைவாள். அல்லாமலும் நாயகனானவன் பசியினால் களையுற்றிருக்கும்போது அவன்கொண்ட மனைவி சந்தோஷித்து தான் புசிப்பாளே ஆனால் அம்மாதானவள் இப்பூமியினிடத்து பல பேர்களுடைய மலங்களைத்தின்று பாதகசென்மம் கொண்ட பன்றி யுருவாகப் பிறந்து பரதவிப்பாள்.

உதாரணம்.

"ஏதி லான்ற னெழில்கண் டுவப்பவர்
பேது செய்துழல் பேயுரு வெய்துவார்
காத லன்பசிக் கக்களித் துண்பவர்
பாத கஞ்செயும் பன்றியிற் றோன்றுவார்" 21

நிறைந்த கற்புடைய மடந்தையர் பூப்பின் காலத்து மூன்றுநாளும் மறைவிடமாக விருந்து தமது நாயகருக்கு தங்கள் முகத்தை காட்டவே மாட்டார்கள். அவர்களோடு யாதொரு வார்த்தையும் பேசவே மாட்டார்கள். புனல் தோய்ந்தபின் தமக்கு சாக்ஷியாக வேற்பட்ட காதலருடைய திருமுகத்தை மிக்க களிப்புற்று நோக்குவார்கள்.

உதாரணம்.

"ஆன்ற கற்பினர் பூப்பி னகன்றுறை
மூன்று நாளு முகமலர் காட்டலர்
தோன்ற யாதுஞ்சொல் லார்புனற்றோய்ந்தபின்
சான்ற காதலர் தம்முகம் நோக்குவார்" ௨௩

பரிசுத்தம்பொருந்திய புனலில் ஸ்நானம் புரிந்த நான்காம் நாளில் தன்னுடைய இனிய நாயகன் ஊரிலில்லாமல் வேற்றூருக்குச் சென்றிருப்பானாகில் அனைய கணவனை உள்ளன்போடு தம்மனங்கொண்டு நினைத்து குளிர்ச்சி பொருந்திய பனிபரவிய ஆகாயத்திற்றோன்றிய சூரிய பகவானைப் பார்ப்பார்கள். இதுவே கற்புக்குரிய மங்கையர்க்கழகென வேதாகமங்கள் கூறும்.

உதாரணம்.

"புனித மாநதிப் பூம்புன லாடுநா
ளினிய காதலர் வேற்றிடமெய்திடி
லனைய கேள்வரை யன்பின் மனக்கொடு
பனிவி சும்பிற் பரிதியை நோக்குவார்" ௨௩

பெண்ணானவள் பூப்புற்றிருக்கும் நாளையில் மற்றொருவரைத் தீண்டல், பேசுதல், பாதையில் நடத்தல், அன்னிய ஊர்களுக்குப்போதல், விழாக்காண்டல், குளிர்ச்சிபொருந்திய பரிமளமணிதல், பகலிற்றுயிலல் முதலியவற்றை விலக்கவேண்டுமென்பதை மறைகளனைத்தும் ஓதும்.

உதாரணம்.

"சூதக முற்று டன்னைத் தொட்டிட லிருத்தல் பேசல்
பாதையி னடத்தன் மற்றோர்ப் பதியிடைத் திருநாட் காண்டல்
சீதமென் கலவை பூச றிவாவினிற் றுயிறன் முற்று
மாதருக் கடாத தென்று மனுமுத லனைத்து மோதும்" ௨௪

பெண்கள் பிரவிடையான நான்காநாளில் ஸ்நானஞ்செய்து கதிரோனைநோக்கி பஞ்சகௌவிய மருந்தி பின் மனையிற் புகுந்து அகத்தை சுத்தஞ்செய்து அவ்வில்லிலிருந்து கதம்பமணிந்து நாயகன் விரும்பும்படிச்செய்து கொள்ளவேண்டுமென்பது வேதத்தின்முறை.

உதாரணம்.

"மருவிய நாலா நாளில் வயங்குநீ ரதனின் மூழ்கி
யிரவியை நோக்கிப் பஞ்ச கௌவிய மினிது துய்த்துத்
திருமனை புனித மாக்கிச் சென்றதிற் புகுந்து வேண்டும்
விரைநறுங் கலவை பூசிக் காதலன் விரும்ப வைகல்" 25

தன் நாயகன் அதிககாலமாக பிரதேசங்களிற் சென்றிருக்குங் காலத்தில் நாயகனுக்கு யாதொரு தீங்கும் நேராவண்ணம் பரிசுத்தமான தெய்வத்தை நாடோறும் நல்லமனத்தொடு கற்புள்ள மங்கையர்கள் தொழுவார்கள். என்பது வேதத்தின் கொள்கை.

உதாரணம்.

"சேய கால மகன்றிடு சீரியோன்
போய தேயத்திற் றீங்குபு காவண
மேய நல்வரம் வேண்டுமென் றெண்ணியே
தூய தேவைத் தொழுவர்க ணங்கைமார்" 26

தங்கள் நாயகர் வேற்றூருக்குப் போயிருக்குங் காலத்தில் தேகத்தில் வாசனைத்திரவியங்களையும், கூந்தலுக்கு மணம்பொருந்திய மலர்களையும், விழிகளுக்கு மையிட்டுக்கொள்வதையும் கற்புநெறி வழுவா மங்கையர்கள் விலக்கவேண்டும். தம் நாயகர் ஊரிலிருக்குங் காலத்தில் பலவித அலங்காரங்களைச் செய்துகொள்ளலாமென்பது வேதத்தின் கருத்து.

உதாரணம்.

"கணவன் வேற்றூர் கலந்திடு காலையிற்
பணைமு லைக்குக் கலவை பரிந்திடார்
மணம லிந்த மலர்க்குழல் வைத்திடார்
துணைநெ டுங்கணுக் கஞ்சனந் தொட்டிடார்" 27

தங்கள் நாயகர் மறித்திடில் பகலில் ஒருபொழுதுண்டு, வெற்றிலைப்பாக்கு அருந்துவதை அகற்றி, பாயில் துயில்வதை தவிர்த்து, மண்மேல் துயின்று, தாம் இறந்தபின் நல்லுலகடைய பலவித நோன்புகளியற்றவேண்டுமென்பதும், இன்னும் விதவைப் பெண்கட்கு அநேக விதிகளிருப்பினும், சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிட்டேன். அஃதையாவறு அனுஷ்டிக்க வேண்டும்!

உதாரணம்.

"மருவு காதலன் மாய்ந்திடின் மங்கைய
ரொருப கற்பொழு துண்டரும் [illegible]க்கிலே
விரியும் பாயல் வெறுத்துமண் மேற்றுஞ்சி
யரிய நோன்புக ளாற்றிட வேண்டுமால்"

இதுவரை பெண்கட்குரிய கற்பு ஒழுக்கமாகிய இலக்ஷணங்களைக்கூறி வந்தோமாயினும், ஆடவர்கள் அப்பெண்கள் விஷயத்தில் நடந்து கொள்ளவேண்டிய விதிலக்ஷணங்கள் சிலவற்றையுங் கூறுவாம்.

ஒரு கன்னியினுடைய நடையழகு, அணியழகு முதலியவற்றை ஓர்விதமாய்க் கண்டும், அவளும் தன்னைக்கடைக்கண்ணால் பார்க்கும் படியான நிலையைப்பெற்றும், இருவரும் மனமொத்த 'காதல்' பூண்டு வேதவிதிப்படி மணஞ்செய்யப்பெற்று, இப்பிறவியில் பிரிகிலோமென்று பேசிச் சேர்ந்து, உயிருக்கே உரிமைபூண்டு, வாழ்ந்து வருவது உத்தமன், உத்தமிகளின் இயல்பு இப்படியிருக்க, உயிருரிமை கொண்ட அம்மனைவியை இடையிற் பிரிந்துபோவது ஆடவருக்கு அழகல்ல.

உதாரணம்.

"நடையை நோக்கியும் நகையினை நோக்கியும் நயனக்
கடையை நாட்டிய கன்னியைக் கனல்மறை சான்றாய்
அடைய லாகிப்பின் பிரிகிலே னெனவவணைக் துயிர்க்கை
யுடைய னாகிப்பின் பிரிவதும் உத்தமர்க் கழகோ?" உ

ஒருவனுக்கு ஒரு கன்னியை மணஞ் செய்விக்குங்கால் மணச்சடங்கு நடக்கின்றன. அவை தெய்வப்பிரமாணங்களாம். புரோகிதராகிய குரு, ஆண் பெண் இருவரையும் அக்கினி அந்தரங்க தெய்வசாக்ஷியாய்க் கொண்டும், உறவின்முறை வெளிசாக்ஷியாய்க் கொண்டும், வேதமந்திரங்களால் சேர்த்து வைக்கின்றனர். பெண்ணைப் பரிபாலனஞ்செய்த தந்தை, வரன் கரத்திற் பிடித்துக்கொடுத்து தாரைவார்த்துக் கொடுக்கின்றனன். ஏற்றுக்கொள்பவன் மரணபரியந்தம் உமது மகளை நான் வைத்து பரிபாலனஞ் செய்கிறேனென்பதான வேதமந்திர விதியுடன் ஏற்றுக்கொள்கின்றனன்.

உண்மை யிப்படியிருக்க, பேதை ஜனங்கள் இவ்வுடன்படிக்கையை யெண்ணாமல், மனம்போல் நடந்து கெட்டுப்போகின்றனர்.

உதாரணம்.

"நெய்யடைத் தீயெதிர் நிறுவி நிற்கிவள்
கையடை யென்றவச் சனகன் கட்டுரை
பொய்யடை யாக்கிய புன்மை யெற்கினி
மெய்யடை யாதினி விளிதல் நன்றரோ?" 30

தனக்கு உரியவளாகிய மனைவிக்கு உண்ண, வுடுக்க, அணிய, ஆகிய பொருள்களை மணவாளன் கொடுத்துவரவேண்டியவனாக விருக்கிறான். இல்லையெனில், உழுது, எருவிட்டு, பண்படுத்தாத நிலம் பயன் தராததுபோல், இல்லறப்பயன் தராத நிலையில் அவள் ஆய் விடுவள்.

உதாரணம்.

"செல்வான் கிழவ னிருந்திடி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்" 31

இவ்வுலகின்கண் மாதர்கள் நெறிதவறிவிடுகிறதற்கு காரணங்கள் சில விருப்பினும், முக்கியம் கணவன் அவளைக் கவனியாதிருத்தலேயாம், அப்பெண்ணை ஓர் காலம் காதலுடன் மணஞ்செய்தும், பின் அவள் எப்படிப்போனாலென்ன வென்று கவனியாதிருந்து விடுகின்றனன். அப்படியிருந்துவிடின் அவளால் ஏற்படும் பாவதோஷங்கள் கணவனையே சாரும்.

உதாரணம்.

"மண்டலத் தோர்கள் செய்த பாவமன் னவரைச் சேரும்
திண்டிறல் மன்னர் செய்த தீங்குமந் திரியைச் சேரும்
தொண்டர்கள் செய்த கன்மந் தொடர்ந்துதங் குருவைச் சேரும்
கண்டன மொழியாள் செய்த கன்மமுங் கணவர்க் காமோ" 32

மேற்சொன்ன பான்மைப்படி நாயகன் கவனித்தாலும், கவனியாவிடினும், மாதானவள் தமது உள்ளத்தில் உறுதியாய்க்கொள்வது கணவனையன்றி வேறொன்றையும் அல்ல. மாதானவள் மக்களைப்பெறலாம் மற்றப்பொருள்களையும் அடையலாம். ஆனால், உத்தம ஸ்திரீயானவள் கணவனைமட்டும் அடையமுடியாதென்பதை நினைவு கூர்வாளாக.

உதாரணம்.

"குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளளலாம் பெறலாமோ—கொற்றவனே!
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கால் மழைபொழிய நொந்து." 33

முடிவுரை.

என்னருமைச் சகோதர சகோதரிகளான சிகாமணிகளே! நான் இதுவரையில் சொல்லிவந்தபடி வழுவாமல் இல்லறவியல்பில் நின்றுவரும் மங்கையர்கள், ஆடவர்கள் இப்பூவுலகின்கண் யாவரும் புகழத்தக்க பெரும் பாக்கியத்தைப் பெற்றுப் பின் பொய்வாழ்வாகிய இப்பிறவியை விட்டொழிந்து சொர்க்கலோகமடைந்து சுகமாக வாழ்வார்களென்பது வேதாகம புராண விதிகாசங்களான சாஸ்திரசம்மதம்.

கவி.

இப்படி யுரைத்த கற்பி னியல்பினோ டொழுகி யென்று
மப்படி வாழ வல்ல வணங்கனார் கணவ ரோடு
மெய்ப்படியிடத்தோரேத்தும் புகழினால் விளங்கிப் பின்னர்ப்
பொய்ப்படி வத்தி னீங்கிப் பொன்னுல கடைந்து வாழ்வார். 34

கணவன் மனைவி கற்பு விளக்கம்.

முற்றிற்று.

சந்திரபானு பிரஸ், காஞ்சீபுரம்.